## ஜனவரி – 18 – வியாழன்

### தூய எமிலி

**அச்சம் என்னை ஆட்கொள்ளும் நாளில், உம்மையே நான் நம்பியிருப்பேன்.திபா. 56:3**

---

### முதல் வாசகம் : 1 சாமுவேல் 18 : 6 – 9, 19 : 1 - 7

தாவீது சவுலிடம் பேசி முடித்த போது யோனத்தானின் உள்ளம் தாவீதின் உள்ளத்தோடு ஒன்றுப்பட்டது. யோனத்தான் அவரை தம் உயிரெனக் கருதி, அவர் மீது அன்பு கொண்டிருந்தார். அன்று சவுல் தாவீதை தம்முடன் அழைத்துச் சென்றார். அவருடைய தந்தை வீட்டுக்கு திரும்பிப் போக இசைவு அழிக்கவில்லை. பின்பு யோனத்தான் தாவீதுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஏனெனில் அவரை தம் உயிரெனக் கருதி, அவர் மீது அன்பு கொண்டிருந்தார். யோனத்தான் தான் அணிந்திருந்த மேலங்கியைச் சுழற்றி தாவீதுக்குக் கொடுத்தார். அத்துடன் தம் அங்கி, வாள் வில், கச்சை ஆகியவற்றையும் கொடுத்தார். தாவீது சவுல் தம்மை அனுப்பிய இடமெல்லாம் சென்று வெற்றியைக் கொணர்ந்தார். அதனால் சவுல் அவரை படைத்தலைவராக்கினார். மக்கள் எல்லோரும் மற்றும் சவுலின் அலுவலர்களும் இதைப் பெரிதும் விரும்பினர். தாவீது பெலிஸ்தியனைக் கொன்ற பின், வீரர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, இஸ்ரயேலின் எல்லா நகர்களிலிருந்தும் பெண்கள் ஆடல் பாடலுடன் அரசர் சவுலை சந்திக்க வந்தனர். அவர்கள் கஞ்சிராக்களோடும் நரம்பிசைக் கருவிகளுடன் மகிழ்ச்சிப் பாடல் எழுப்பினர். தாவீதைக் கொல்ல வேண்டுமென்று தன் மகன் யோனத்தானிடமும் தம் அலுவலர் எல்லோரிடமும் சவுல் தெரிவித்தார். ஆனால் சவுலின் மகன் யோனத்தான் தாவீதின் மீது மிகுதியாக அன்பு கொண்டிருந்தார். ஆதலால் தாவீதைப் பார்த்து யோனத்தான், ”என் தந்தை சவுல் உன்னைக் கொல்லத் தேடுகிறார். ஆதலால் எச்சரிக்கையாய் இரு. காலையிலேயே புறப்பட்டு மறைவாக ஓர் இடத்திற்குச் சென்று ஒளிந்துக்கொள். நீ வெளியில் இருக்கும் சமயத்தில் நான் என் தந்தையின் அருகில் இருந்துக் கொண்டு, உன்னைப் பற்றி அவரிடம் பேச்சுக் கொடுப்பேன் அப்படி நான் அறிகிறதையெல்லாம் உனக்குத் தெரிவிப்பேன்” என்றான். யோனத்தான் தாவீதைப் பற்றித் தம் தந்தை சவுலிடம் நல்லவிதமாகப் பேசி, ”அரசர் தம் அடியான் தாவீதின் பொருட்டு பாவம் செய்ய வேண்டாம் ஏனெனில் அவன் உமக்குத் தீங்கு ஏதும் செய்ததில்லை மேலும் அவனுடைய அரசியல் உமக்கு பயனுடையவாய் இருந்தன. அவன் தன் உயிரைப் ஒரு பொருட்டாய் எண்ணாது அப் பெலிஸ்தியனைக் கொன்றான். ஆதலால் ஆண்டவர் இஸ்ரயேலர் எல்லோருக்கும் பெரும் வெற்றியை அளித்தார். நீர் அதைக் கண்டு மகிழ்ச்சியுற்றீர். அப்படியிருக்க எக்காரணமும் இல்லாமல் தாவீதைக் கொல்வதன் மூலம் குற்றமற்ற இரத்தத்திற்கு எதிராக நீர் ஏன் பாவம் செய்ய வேண்டும்? என்று கூறினார். சவுல் யோனத்தானின் வார்த்தைகளைக் கேட்டார். அதனால் சவுல் ”வாழும் ஆண்டவர் மேல் ஆணை! அவன் கொலை செய்யப்படமாட்டான்” என்றார். பின்பு யோனத்தான் தாவீதை அழைத்து இவ்வார்த்தைகளை எல்லாம் அவருக்குக் கூறினார். மேலும் யோனத்தான் தாவீதை சவுலிடம் அழைத்துச் செல்ல, முன்பு போலவே தாவீது அவரது பணியில் ஈடுபட்டார்.

**பதில்பாடல்:** கடவுளையே நம்பியுள்ளேன் எதற்கும் நான் அஞ்சமாட்டேன்.

### நற்செய்தி : மாற்கு 3 : 7 – 12

இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் சீடருடன் கடலோரம் சென்றார். கலிலேயாவிலிருந்து பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். மேலும் யூதேயா, எருசலேம், இதுமேயா, யோர்தான் அக்கரைப்பகுதி, தீர், சீதோன் ஆகிய இடங்களி லிருந்தும் பெருந்திரளான மக்கள் அவர் செய்தவற்றையெல்லாம் கேள்வியுற்று அவரிடம் வந்தனர். மக்கள் கூட்டம் தம்மை நெருக்கிவிடாதவாறு தமக்காகப் படகு ஒன்றை முன்னேற்பாடாக வைத்திருக்குமாறு அவர் சீடருக்குச் சொன்னார். ஏனெனில், பலரை அவர் குணமாக்கியதால், நோயுற்றோர் அனைவரும் அவரைத் தொடவேண்டுமென்று வந்து அவர்மீது விழுந்து கொண்டிருந்தனர். தீய ஆவிகளும் அவரைக் கண்டபோதே அவர்முன் விழுந்து, ”இறைமகன் நீரே” என்று கத்தின. அவரோ, தம்மை வெளிப்படுத்த வேண்டாமென அவற்றிடம் மிகக் கண்டிப்பாய்ச் சொன்னார்.

**தியானம்:** பாவத்தின் முக்கியமான ஒரு பிரதிபலிப்பு பொறாமை. இந்த உலகம் பாவத்திற்குள் விழுவதற்கு காரணமாயிருந்ததே இதுவாகும். தான் இழந்து போன தேவமகிமையையும், ஆசீர்வாதத்தையும் ஆதாம் அனுபவிக்கப் போகின்றான் என்ற பொறாமைதான் அவனை வஞ்சிக்கத் தூண்டியது. கடவுளின் ஆசீர்வாதத்தை இழந்த சவுல் இராஜாவை அதிகமாக அழைக்கழித்து அழிவப்பாதையில் பயணம் செய்யத் தூண்டியது. பெண்களால் தாவீது புகழப்பட்டதன் தொடக்கம் சவுல் வானின் மேல் சாய்ந்து பரிதாபமாக சாகும் வரை பொறாமை ஆட்கொண்டது. இயேசுவிடம் ஏதாதாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் மட்டுமல்ல, அவரைத் தொடவேண்டும் என்பதற்கக்காக மக்கள் கூட்டம் அவரை நெருங்கி வருவதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் காண்கின்றோம். கடவுள் நம்பிக்கை என்பது எல்லா மனிதருக்கும் ஆழமாக பதிந்து கிடக்கும் ஒரு மறக்க முடியாத ஒன்றாகும்.. கடவுளை நம்பாதவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவன்கூட இக்கட்டான கூழிநிலையின் நடுவில் ஐயோ கடவுளே என்ற தன்னையறியாமல் கதறுவான். காணப்படாத கடவுளை உலகிற்கு வெளிப்படுத்தியவர் இயேசு. அவர் எம்மிடம் எதிர்பர்ப்பது அன்பு ஒன்று. தன்னை அன்பு செய்பவன் ஏனைய அனைத்தையும் அன்பு செய்வான் அவனிடம் எரிச்சல், பொறாமை, காய்மகாரம் என்ற மனித மனதை நாசமாக்கும் கொடிய சத்துரு நெருங்காது. எனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை மற்றவர்கள் நஸ்டப்பட்டால் போதும் என்ற மனதினைக் கொண்டு நாம் வாழாமல் நல்ல செயல்களாலும், நல்ல குணங்களாலும் மனிதனை மனிதனாக மதிக்க இறைவனிடம் வரம் வேண்டுவோம்.